## தென்காசி நகராட்சி

## 22.07.2010 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் மன்றப்பொருள்

**மன்றப்பொருள்: 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் கடை எண்.41ல் பாரத வங்கி மூலம் பொதுமக்கள் நலன் கருதி ஏ.டி.எம். நிறுவிட திருநெல்வேலி பாரதவஙகி மேலாளர் 10.04.2010ம் தேதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி மேற்படி கடைஎண். 41ல் ஏ.டி.எம். நிறுவ கடை எண்.41க்கு பொதுப்பணித்துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை மதிப்பு ரூ.1000 /- எனஇந்நகராட்சி பொறியாளர் 07.06.2010ம் தேதிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளின் அதிகபட்ச வாடகை தொகை ரூ.6,745/-ஆகும். இவ்விரண்டு வாடகைத் தொகையில் அதிகபட்ச வாடகை தொகையான ரூ.6,745/- ஐ மாத வாடகையாக கணக்கில் கொண்டு 12 மாத வாடகையை முன்வைப்புத் தொகையாகவும் மற்றும் மின் இணைப்பிற்கான கட்டணம் ரூ.5,000/-மும் செலுத்தவும் மற்றும் ஏ.டி.எம். வைப்பதற்கு கடை ஒதுக்கீடு செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம். (1297/10/அ2)

**மன்றப்பொருள்: 2**

தென்காசி நகராட்சி பொதுநிதி 2010-2011ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 228 நாள்.18.06.2010ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 21.06.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகத்தின் மீது தமிழ் வாழ்க ஒளி பலகை அமைத்தல் | 0.35 | ஜி. மாரியப்பன், சூர்யா நியான் லைட்ஸ், கோவில்பட்டி.<br>எஸ்.ராமன், ஸ்ரீராம் நியான் லைட்ஸ், கோயம்புத்தூர் | 11.39% அதிக குறைவு<br>8.86% குறைவு |

அ.கு 1 மேற்படி பணிக்கு மதிப்பீட்த் தொகையினை விட 11.39 % அதிக குறைவாக கொடுத்துள்ள திரு எஸ். மாரியப்பன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2 மேற்படி விளக்கினை அமைக்க அரசாணையில் 27.06.10ம் தேதிக்குள் நிறுவ வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழஙகியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 3</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான டி.என்.72 யு 0687 குடிநீர் டேங்கர் லாரியின் தகுதிச் 19.07.2010ல் முடிவடைகிறது. மேற்படி வாகனத்திற்கு புதியதாக தகுதிச்சான்று பெற கீழ்க்கண்ட பழுதுகள் சரிசெய்ய வேண்டிஉள்ளது.

| வ.எண் | சரி செய்யப்பட வேண்டிய பணிகள் |
|---|---|
| 1 | இன்ஜின் ஆயில், கியர் ஆயில், மாற்றி ஆயில் பில்டர், டீசல் பில்டர் மாற்ற வேண்டும். |
| 2 | கிளட்ச் பிளேட், புதியதாக மாற்ற வேண்டும். |
| 3 | வேக்கம் சிலிண்டர் கிட், அனைத்தையும் மாற்ற வேண்டும். |
| 4 | டிரைவர் சீட், கிளீனர் சீட் கவர் மாற்ற வேண்டும். |
| 5 | 4 வீல்களும் கிரீஸ் பேக்கிங செய்து பேரிங செக்கப் பண்ண வேண்டும் |
| 6 | டைனமோ , செல்ப் ஸ்டாட்டர் ஓவராயிலிங செய்ய வேண்டும். |
| 7 | வேக்கம் டேங பெல்ட் மாற்ற வேண்டும். |
| 8 | வாட்டர் டேங, கீழ்பாகம் கழிவு இருப்பதால் தகடு போட்டு வெல்டிங செய்ய வேண்டும் |
| 9 | பின்பக்கமுள்ள டேன்ஜர் லைட் செட் மாற்ற வேண்டும் |
| 10 | முழுவதும் பெயிண்டிங செய்து நம்பர் எழுத வேண்டும் |
| 11 | லோடு ஸ்பிரிங பட்டை, புஸ் 4 புதியதாக மாற்ற வேண்டும். |
| 12 | வாட்டர் டேங்க் வால்வு புதியதாக மாற்ற வேண்டும் |
| 13 | முழுவதும் எலக்ட்ரிக்கல் செக்கப் செய்ய வேண்டும் |
| 14 | பேலன்ஸ் ராடு புஸ் அனைத்தும் மாற்ற வேண்டும் |
| 15 | கிளட்ச் பாட்டம் சிலிண்டர் புதியதாக போட வேண்டும் |

மேற்கண்ட பழுதினை சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ.44,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 குடிநீர் பணி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (2041/10/இ1)

**<u>மன்றப்பொருள்: 4</u>**

இந்நகராட்சி தென்காசி மதுரைச் சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதால் நகராட்சிக்கு சொந்தமான வளைவு (ஆர்ச்) மற்றும் சுகாதார வளாகம் மேற்படி பணிக்கு இடையூறாக இருப்பதினால் அதனை அகற்றித் தரும்படியும் அதற்கான இழப்பீட்டுத் தொகையை தெரிவிக்கக் கோரி திருநெல்வேலி கோட்டப் பொறியாளர் அவர்களின் கடித எண். NLC 502/2009/வதொஅ/ நாள்.21.06.2008ம் தேதி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அதன்படி வளைவு இழப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சம் மற்றும் புதிதாக சுகாதார வளாகத்தின் கட்டிட இழப்புத் தொகை ரூ.6.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.21.00 இலட்சம் இழப்பீடு ஆகிறது. எனவே மேற்படி இழப்புத் தொகை ரூ.21.00 இலட்சத்தையும் மேற்படி துறையிலிருந்து பெற்றுக் கொண்டு மேற்படி மேம்பாலத்திற்கு இடையூறாக உள்ள மேற்கண்ட கட்டண கழிப்பிடம் மற்றும் நகராட்சி வளைவு ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்தலாம். அதற்கு இணையாக வேறொரு இடத்தில் கட்டண கழிப்பிடம் கட்டவும் மற்றும் வளைவினை அரசின் அனுமதி பெற்று கட்டலாம்.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம். (270/10/இ1)

**<u>மன்றப்பொருள்: 5</u>**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010-11ம் ஆண்டிற்கு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.வீ.கருப்பசாமிபாண்டியன் அவர்களால் இந்நகராட்சிக்கு பரிந்துரை செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ8/1277/2010 நாள்.11.06.2010ம் தேதியில் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்த நிதி (ரூ.இலட்சத்தில்) | நகராட்சி பொது நிதி (ரூ.இலட்சத்தில்) | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.6 எல்.ஆர்.எஸ். பாளையம் ரோடு பொது விநியோகக் கட்டிடம் (ரேசன் கடை ) கட்டுதல் | 2.50 | - | 2.50 |
| 2 | வார்டு எண்.7 சுப்பிரமணியசுவாமி கோவில் தெருவில் (மலையான் தெரு) ஆழ்குழாய் அமைத்தல் | 1.00 | - | 1.00 |
| 3 | வார்டு எண்.10 பாறையடி தெருவில் நூலகக் கட்டிடம் கட்டுதல் | 2.50 | 0.45 | 2.95 |
| 4 | வார்டு எண்.14 தெப்பக்குளம் தெற்கு வாசல் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 0.40 | -- | 0.40 |
| 5 | வார்டு எண்.19 சொர்ணபுரம் மேட்டுத் தெருவில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 1.00 | -- | 1.00 |
| 6 | வார்டு எண்.21 அம்மன் சன்னதி கீழ்புறம் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 0.40 | -- | 0.40 |
| 7 | வார்டு எண்.24 பெரிய தெருவில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 1.00 | -- | 1.00 |
| 8 | வார்டு எண்.31 புலிக்குட்டி விநாயகர் கோவில் தெரு வாய்க்கால் ஓரம் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 0.40 | -- | 0.40 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | வார்டு எண்.31 உச்சிமாகாளி அம்மன் கோவில் 1ம் தெருவில் பஸ் நிறுத்த பயணிகள் நிழற்குடை அமைத்தல் | 2.50 | 0.50 | 3.00 |
| 10 | வார்டு எண்.9 வடக்கு மவுண்ட் ரோட்டில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 1.78 | - | 1.78 |
| 11 | வார்டு எண்.14 மேலமுத்தாரம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 2.50 | -- | 2.50 |
| 12 | வார்டு எண்.16 நடுப்பேட்டை தெருவில் 2 சந்து பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 1.60 | -- | 1.60 |
| 13 | வார்டு எண்.17 பாவடித் தெருவில் தார்சாலை அமைத்தல் | 1.00 | -- | 1.00 |
| 14 | வார்டு எண்.23 அணைக்கரைத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 1.31 | -- | 1.31 |
| 15 | வார்டு எண்.26 மாதாஙகோவில் முதல் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.35 | -- | 1.35 |
| 16 | வார்டு எண்.28 அண்ணா நகரில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 2.00 | 0.60 | 2.60 |
| 17 | வார்டு எண் 19 எஸ்.கே.பி பள்ளிவாசல் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 0.90 | - | 0.90 |
| | மொத்தம் | **24.14** | **1.55** | **25.69** |

மேற்கண்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.24.14 இலட்சம் நகராட்சி நிதி ரூ.1.55 இலட்சம் ஆக மொத்தம் ரூ.25.69 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்கண்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு ரூ.24.14 லட்சம் போக கூடுதல் செலவு ரூபாய் 1.55 லட்சம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3 திட்டப் பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.

## தென்காசி நகராட்சி

## 22.07.2010 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மான நகல்

| மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | 257 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 258 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 259 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 260 | அனுமதிக்கப்பட்டது. மேலும் அரசு அனுமதி பெற்று மதுரை தேசிய நெடுசாலையில் வளைவு கட்ட தீர்மானிக்கப்பட்டது |
| 5 | 261 | அனுமதிக்கப்பட்டது |

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.